# திருவள்ளூர் நகராட்சி
## சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

திருத்திய 1920ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் அட்டவணை III விதி 2(1)ன் கீழ் திருவள்ளூர் நகர் மன்றத்தின் சாதாரணக் கூட்டம் திருவள்ளூர் நகர் மன்ற கூடத்தில் 29.05.2020 –ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் கீழ்கண்ட பொருட்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட முடிவு செய்யப்பட்டது.

### நகர் மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்:1**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மே 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:–998 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்:2**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:–999 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்:3**

இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் மே 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:–1000 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்:4**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிகழும் பிறப்பு இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகளின் விபரங்கள் கணினியில் பதியப்படுகிறது. ஏப்ரல் 2020–ம் மாதத்தில் கீழ்கண்டவாறு பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் விபரங்கள் கணினியில் பதியப்பட்டு உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| ஏப்ரல் 2020 | 6 | 4 | 10 | 12 | 6 | 18 | – | – | – |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்:–1001 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்:5**

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்று ஏற்படாமிலிருக்க சுகாதாரபிரிவில் அவசர அவசியம் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முக கவச அங்கிக்கு (PPE) one time use) விலைப்பட்டியல் கோரியதன் அடிப்படையில் Saram Enviro Services Pvt. Ltd மற்றும் SRK Global நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றது அதன் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ.எண் | பொருட்கள் விவரம் | Saram Enviro Services Pvt. Ltd (விலை ரூ ஒன்றுக்கு) | SRK Global | குறைந்த விலை புள்ளி நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1. | முழு கவச அங்கி PPE One Time Use | ரூ. 850/– | ரூ. 650/– | SRK Global |

குறைந்த விலைப்புள்ளி அளித்த SRK Global நிறுவனங்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கொரோனா வைரஸ் தெற்று நோய் அவசர கால பணி என்பதால் ஆணையர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.644/2020/எச்1)

**தீர்மான எண்:–1002 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:6**

கொரானா ( Covid – 19 ) வைரஸ் பரவாமல் தடுக்க மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவிற்கிணங்க வெளியிட்ட அரசு ஆணையின்படியும் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 144–ன் கீழ் 24.03.2020 முதல் ஊரடங்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மாவட்ட எல்லைகள் மூட உத்திரவிடப்பட்டுள்ளது. இதனால் பேருந்து மற்றும் இரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், அவரவர்களின் வசிப்பிடங்களிலிருந்து இவ்வலுவலகத்திற்கு பணிபுரிய வந்து செல்ல ஏதுவாக வாகன வசதி செய்து தரும்படி கோரியுள்ளதை தொடர்ந்து, நிர்வாக நலன் கருதியும், அத்தியாவசிய பணிகள் தடையின்றி மேற்கொள்ளவும், மேற்கூறியவாறு ஏற்கனவே முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டது போன்று வாகன வசதி செய்யவும் தோராய செலவின தொகை ரூ. 1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கியும் ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு;–**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கலாம்.
   (ந.க.எண். 0793/2020/இ1)

**தீர்மான எண்:–1003 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:7**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செயல்படும் பாதாளசாக்கடை பணிகளில் உள்ள **4** கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் **9** கழிவு நீர் உந்து நிலையங்களில் உள்ள பல்வேறு குதிரைத்திறன் கொண்ட மின்மோட்டார்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மின் அழுத்தம் காரணமாக மின்மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதால், கழிவுநீர் வெயியேறி சாலையில் தேங்கி துர்நாற்றம் ஏற்படுவதுடன் சுகாதார சீர் கேடு ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே பல்வேறு குதிரைத்திறன் கொண்ட மின்மோட்டார்கள், Panel Boards மற்றும் EB Main Board, தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு முறையில் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.**9.00** இலட்சத்திற்கும் மற்றும் ஒப்பந்ததப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

   (ந.க.எண். 4541/ 2019/ இ2 )

**தீர்மான எண்:–1004 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:8**

இந்நகராட்சிக்கு சொந்தமான வெள்ளியூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து இராஜம்மாள் தேவி பூங்காவில் உள்ள நீர் உந்து நிலையத்திற்கு வரும் பிரதான குழாய்களில் அடிக்கடி ஏற்படும் உடைப்பின் காரணமாக குடிநீர் வீணாவதால் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணி பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் வெள்ளியூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள **100** குதிரைத்திறன் கொண்ட மின்மோட்டார்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் சரி செய்ய போதிய ஆட்கள் இல்லாத காரணத்தாலும் மற்றும் **100** HP மின்மோட்டார்கள், Panel Boards மற்றும் EB Main Board, தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு முறையில் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.**9.80** இலட்சத்திற்கும் மற்றும் ஒப்பந்ததப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

   மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

   (ந.க.எண். 4541/ 2019/ இ2 )

**தீர்மான எண்:–1005 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:9**

திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**1** முதல் **27** வரை உள்ள தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. பராமரிக்கப்பட்டு வரும் தெரு விளக்குகளில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் பொருத்தப்படும் மின் இணைப்புக்குண்டான மின் மீட்டர் பொருத்தக்கூடிய பாக்ஸ் ஒரு சில இடங்களில் மிகவும் பழுதடைந்துள்ளது அதனை புதியதாக மாற்ற தயாரிக்கப்பட்ட மதிப்பபீடு ரூ.**5.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து பொது நிதி கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

   (ந.க.எண். 4541/ 2019/ இ2 )

**தீர்மான எண்:–1006 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:10**

திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 நேதாஜி சாலை பகுதியில் அமைத்துள்ள பாதாளசாக்கடை கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள 10 HP மின் மோட்டார் மூலம் அப்பகுதியில் வெளியேற்றப்படும் கழிவு நீரை பம்ப் செய்யப்பட்டு ஈக்காடு பகுதியில் அமைந்துள்ள நீர் உந்து நிலையத்திற்கு கழிவு நீரை வெளியேற்றுகிறது. அப்பகுதியில் உள்ள கழிவுநீர் செல்லக் கூடிய பைப் பகுதியில் அடைப்பு ஏற்பட்டு கழிவு நீரை வெளியேற்ற இயலவில்லை மற்றும் கிணற்றின் அடிபகுதியில் உள்ள குடியிருப்பு வாயிலாக வெளியேற்றும் கழிவு நீரின் மூலம் மண்ணும் சேர்ந்து வெளியேறுவதால் மோட்டாரின் கீழ் பகுதியில் மணல் சேருவதால் மோட்டார் இயங்காத நிலை உள்ளதாலும் மேற்கண்ட பகுதியில் அடைப்பினை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 4541/ 2019/ இ2 )

**தீர்மான எண்:–1007 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:11**

திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கழிவு நீரேற்று நிலையத்தில் உள்ள கிணறுகளில் உள்ள மின் மோட்டார் மூலம் பம்ப் செய்யக்கூடிய பைப்பில் அடைப்பு ஏற்ப்பட்டு கழிவு நீர் சரியாக வெளியேற்ற இயலாததால் கழிவுநீர் தெருக்களில் தேங்குவதால் கணபதி நகர், எம்.ஜி.ஆர் நகர், வரதராஜ நகர் ஆகிய பகுதிகளில் உள்ள கழிவு நீர் சேகரமாகும் கிணறு மற்றும் கழிவுநீர் செல்லக்கூடிய பைப் அடைப்பினை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 4541/ 2019/ இ2 )

**தீர்மான எண்:–1008 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:12**

இந்நகராட்சியில் வெள்ளியூர் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்தும் மற்றும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆழ்துளை கிணறு இருந்தும் 13 மேல்நிலை நீர்தேக்க தொட்டி வழியாக ஒரு நாளைக்கு 56.40 லட்சம் லிட்டர் குடிநீர் 1 முதல் 27 வார்டு பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தொடர்ந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய இராஜம்மாள் தேவி பூங்காவில் உள்ள நீர் உந்து நிலையம், பல்வேறு இடங்களில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி, மற்றும் பல்வேறு இடங்களில் உள்ள ஆழ்துளை கிணறு பகுதியில் உள்ள குளோரினேசன் இயந்திரத்திற்கு சோடியம் ஹைபோ குளோரைடு திரவம் (Liquid Chlorine) சப்ளை செய்து பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.9.90 லட்சத்திற்கும் மற்றும் ஒப்பந்ததப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 4541/ 2019/ இ2 )

**தீர்மான எண்:–1009 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்:13

இந்நகராட்சி அலுவலகப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் சர்வர் ஆகியவற்றை ஓராண்டிற்கு பராமரிப்பு பணிகள் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரிடவும், அதற்கான தோராயச் செலவினம் ரூ.4,50,000 /- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 4541/ 2019/ இ2 )

**தீர்மான எண்:—1010 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

***********